# பச்சிலைப்பள்ளி பிரதேச சபை - பளை

## 17.03.2023 விசேட சபைக்கூட்ட வரைபு அறிக்கை

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் 2023 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத விசேட சபைக்கூட்டம் 2023.03.17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் கௌரவ தவிசாளர் திரு.சு.சுரேன் அவர்களின் தலைமையில் மண்ணுக்காக உயிர் நீத்த மாவீரர்களுக்காகவும், போராட்ட காலத்தில் அநியாயமாக படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுக்காகவும் இரண்டு நிமிட அகவணக்கத்துடன் ஆரம்பமாகியது. இக் கூட்டத்தில்

01. கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்

02. கௌரவ உபதவிசாளர் முத்துக்குமார் கஜன்

03 .கௌரவ உறுப்பினர் யோகேஸ்வரி பிரதாகரன்

04. கௌரவ உறுப்பினர் வரதராசா டிசாந்தன்

05. கௌரவ உறுப்பினர் வேல்முருகு கோகுலராஜ்

06. கௌரவ உறுப்பினர் கணபதிப்பிள்ளை துர்சோதனன்

07. கௌரவ உறுப்பினர் அருட்செல்வி கனகராசா

08. கௌரவ உறுப்பினர் தவராசா றமேஸ்

09. கௌரவ உறுப்பினர் ஈஸ்வரன் டயாளினி

10. கௌரவ உறுப்பினர் தயானந்தகுமார் சுகந்தி

11. கௌரவ உறுப்பினர் தியோப்பிள்ளை பிரமிளா

12. கௌரவ உறுப்பினர் வேலுப்பிள்ளை வசந்தரூபன்

13. கௌரவ உறுப்பினர் நாகராசா நகுலேஸ்வரன்

ஆகிய உறுப்பினர்களுடன் சபையின் செயலாளர் திருமதி த.தர்சினி அவர்களும் கலந்து கொண்டார். சபை அமர்வுக்கு வருகை தந்த கௌரவ உபதவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் ஆகியோரை வரவேற்று தவிசாளரினால் தலைமையுரை நிகழ்த்தப்பட்டது.

நாளை மறுதினத்துடன் சபையின் ஆயுட்காலம் முடிவடைவதாகவும் விசேட அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதற்காக சபை கூட்டப்பட்டதாகவும், 2018.03.18

ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு அமைச்சரின் தற்துணிவினால் ஒரு வருட காலத்திற்கு ஆயட்காலம் நீடிக்கப்பட்டாகவும் தெரிவித்தார்.

சபையிலுள்ளவர்களில் கணிசமானவர்கள் வேட்பாளர்களாக உள்ளார்களெனவும், தேர்தலில் வெற்றி பெற்று பிரதேச சபை உறுப்பினராக தெரிவாகுவதற்கு வாழ்த்துவதாகவும், இவ்வருடம் உள்ளூராட்சி சபை தேர்தல் இடம்பெறுவதற்கான சாத்தியமில்லை எனவும், ஒரு வருடத்தின் பின் ஜனாதிபதி தேர்தல் இடம்பெறலாமெனவும் அதன் பிற்பாடு மாகாண சபைத் தேர்தல் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இவ்வளவு காலமாக நிதியீட்டங்களைப் பெற்று மக்களுக்கு சேவையாற்ற கூடியதாக இருந்ததாகவும் எதிர் வருகின்ற 19 ம் திகதியிலிருந்து இச்சூழல் இல்லாமல் போகின்றதென கூற முடியாதெனவும் சபையுடன் தொடர்பு கொண்டு மக்களுக்கு சேவை செய்யலாமெனவும், மக்களின் பிரச்சினைகளினை பூர்த்தி செய்ய முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

சபையினது ஆயுட்காலத்தில் இரு செயலாளர்களுடன் இணைந்து பணியாற்றியதாகவும் தற்போதைய செயலாளர் திரமதி. த. தர்சினி அவர்கள் சேவைகளை வழங்குவதற்கு சரியாக வழிகாட்டியதாகவும் தெரிவித்தார். சில சபைகளில் சபையின் ஆயுட்காலத்தில் நான்கு, ஐந்து செயலாளர்கள் மாற்றம் இடம்பெற்றதாகவும் செயலாளர்களை மாற்றம் செய்வது முடியாமையின் தன்மையெனவும், இருக்கின்ற வளத்தை எமக்கு ஏற்றவாறு மாற்றி சேவைகளை வழங்க வெண்டுமெனவும் தெரிவித்தார்.

சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. தம்மோடு இணைந்து சேவைகளை வழங்குவதற்கு ஒத்தழைப்பு வழங்கிய பிராந்திய உள்ளுராட்சி உதவி ஆணையாளர், உள்றுராட்சி ஆணையார் அவர்களிற்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் காணப்படும் அனைத்து திணைக்களங்களும் தம்மோடு இணைந்து செயற்பட்டதாகவும் இதற்கு நன்றியும் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து கௌரவ  தவிசாளர் அவர்களினால் 10.03.2023 திகதிய சபைக்கூட்ட அறிக்கை அங்கீகாரம் கோரப்பட்டது. கௌரவ தவிசாளரினால் முன்மொழியப்பட்டு

கௌரவ உறுப்பினர் வேலுப்பிள்ளை வசந்தரூபன் அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**தீர்மான இலக்கம் :- 01 / 17.03.2023**

எமது சபை நிதியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட கீழ்வரும் வேலைகளுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான அனுமதியை வழங்குவதென சபையில் தீர்மானிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

- புலோப்பளை உப அலுவலக வீதிகள் (இறுதிக்கொடுப்பனவு) – 3,332,311.75
- பொற்பத்தை இந்து மயான உள்ளக வீதி திருத்தம் (இறுதிக்கொடுப்பனவு)- 241,854.57
- மலையான்காடு இந்து மயான உள்ளக வீதி திருத்தம் (இறுதிக்கொடுப்பனவு)- 243,328.92
- Balance work for market building & open market Shed (இறுதிக்கொடுப்பனவு)- 993,274.03
- Completion work for market building (Stage- 1) & open market Shed (இறுதிக்கொடுப்பனவு)- 3,222,218.48
- பளை பொது விளையாட்டு மைதான வேலி புனரமைப்பு மிகுதி வேலை (இறுதிக்கொடுப்பனவு) – 50,000.00

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் தவராசா ரமேஸ்

**தீர்மான இலக்கம் :- 02 / 17.03.2023**

எமது சபையின் பயன்பாட்டிற்காக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட EP GX – 8886 இலக்க பிக்கப் வாகனத்திற்கான வருமானவரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக கடந்த ஆண்டுகளிற்குரிய கொடுப்பவு ரூபா.29,750.00 மற்றும் தண்டம் ரூபா.6,625.00 ஆகியவற்றினை முற்பணமாக செலுத்தவதெனவும் கடந்த ஆண்டுகளிற்குரிய கொடுப்பவினை கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்று ணணண வழங்குவதற்கும் முற்பணமாக செலுத்தப்பட்ட தண்டத்தினை மாகாண நிதி விதிக்கமைய உரிய அலுவலர்களிடமிருந்து பெற்று சீர் செய்வதற்கும்

அனுமதியினை வழங்குவதென சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் நாகராசா நகுலேஸ்வரன்

**தீர்மான இலக்கம் :- 03 / 17.03.2023**

எமது சபையில் கடமையாற்றும் 12 உத்தியோகத்தர்களுக்கு சித்திரைப்புத்தாண்டு விழா முற்பணம் வழங்குவதென ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் வேலுப்பிள்ளை வசந்தரூபன்

**தீர்மான இலக்கம் :- 04 / 17.03.2023**

எமது சபையின் பயன்பாட்டிற்காக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தினால் வழங்கப்பட்ட EP GX – 8886 இலக்க பிக்கப் வாகனத்திற்கான வருமானவரி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக கடந்த ஆண்டுகளிற்குரிய கொடுப்பவு ரூபா 29,750.00 ஐ கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்று திரண்ட நிதியிலிருந்து வழங்குவதென சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

| **இல.** | **வாகன இலக்கம்** | **காலப்பகுதி** | **வரி (ரூபா)** |
|---|---|---|---|
| 01 | EP GX - 8886 | 2021.04.16 – 2022.12.17 | 18,250.00 |
| | | 2022.12.18 – 2023.12.17 | 11,500.00 |
| **மொத்தம்** | | | **29,750.00** |

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர் :- கௌரவ உறுப்பி தவராசா ரமேஸ்

தீர்மான இலக்கம் :- 05/ 17.03.2023

எமது சபையின் நிலையான வைப்புக்களிற்கு தற்போது வங்கிகளினால் விசேட வட்டி

வீதம் வழங்கப்பட்டு வரும் நிலையில் பின்வரும் வகையில் நிலையான வைப்புக்களினை மீளப் பெற்று புதிய விசேட வட்டி வீதத்தை கோரிப்பெற்று ஒரு வருடகால நிலையான வைப்புக்களில் மீளவும் வட்டி இழப்பு ஏற்படாத வகையில் அந்தந்த வங்கிகளில் வைப்புச்வெய்லதற்கு அனுமதியினைப் வழங்குவதென சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

| Se.no | Name of the Bank | Account Number | Investment Date (If available) | Maturity Date (If available) | Amount | Close & Re-open Date |
|---|---|---|---|---|---|---|
| 1 | கிளிநொச்சி NSB | 2-0019-01-44991 | 08.09.1998 | 3 Months | 680,906.90 | March 2023 |
| 2 | கிளிநொச்சி NSB | 2-0019-01-44975 | 29.07.1998. | 3 Months | 680,906.90 | March 2023 |
| 3 | கிளிநொச்சி NSB | 2-0019-01-53133 | 14.04.2011 | 1 Year | 500,000.00 | 14.04.2023 |
| 4 | கிளிநொச்சி NSB | 2-0019-01-53125 | 14.04.2011 | 1 Year | 500,000.00 | 14.04.2023 |
| 5 | கிளிநொச்சி NSB | 2-0019-01-53117 | 14.04.2011 | 1 Year | 500,000.00 | 14.04.2023 |
| 6 | கிளிநொச்சி NSB | 2-0019-01-53141 | 14.04.2011 | 1 Year | 500,000.00 | 14.04.2023 |
| 7 | கிளிநொச்சி NSB | 2-0019-01-78381 | 11.12.2013 | 6 Months | 500,000.00 | 11.06.2023 |
| 8 | கிளிநொச்சி NSB | 2-0019-01-78390 | 11.12.2013 | 6 Months | 500,000.00 | 11.06.2023 |
| 9 | கிளிநொச்சி NSB | 2-0019-01-99176 | 19.08.2015 | 5yeas | 3,000,000.00 | March 2023 |
| 10 | கிளிநொச்சி NSB | 2-0019-02-13551 | 26.05.2016 | 6months | 2,000,000.00 | 26.05.2023 |

-

| Se.no | Name of the Bank | Account Number | Investment Date (If available) | Maturity Date (If available) | Amount | Close & Re-open Date |
|---|---|---|---|---|---|---|
| 1 | சாவகச்சேரி NSB | 2-0073-01-83288 | 28.07.1998 | 1Year | 533,039.35 | 28.07.2023 |
| 2 | சாவகச்சேரி NSB | 2-0073-01-83130 | 07.09.1998 | 1 Year | 314,621.95 | 07.09.2023 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | சாவகச்சேரி NSB | 2-0073-01-83121 | 07.09.1998 | 1 Year | 314,621.95 | 07.09.2023 |
| 4 | சாவகச்சேரி NSB | 2-0073-01-83105 | 15.09.1999 | 1 Year | 1,423,632.00 | 15.09.2023 |
| 5 | சாவகச்சேரி NSB | 2-0073-01-82800 | 21.11.1996 | 1 Year | 610,318.20 | March 2023 |
| 6 | சாவகச்சேரி NSB | 2-0073-01-82818 | 21.11.1996 | 1 Year | 406,870.90 | March 2023 |
| 7 | சாவகச்சேரி NSB | 2-0073-01-83709 | 21.02.2002 | 1 Year | 616,000.00 | March 2023 |
| 8 | சாவகச்சேரி NSB | 2-0073-01-83296 | 28.07.1998 | 1 Year | 888,406.30 | 28.07.2023 |
| 9 | சாவகச்சேரி NSB | 2-0073-03-71041 | 26.02.2014 | 6 Months | 1,000,000.00 | March 2023 |

| Se.no | Name of the Bank | Account Number | Investment Date (If available) | Maturity Date (If available) | Amount | Close & Re-open Date |
|---|---|---|---|---|---|---|
| 1 | பளை BOC | 84570034 | 09.07.2019 | 01 month | 580,000.00 | 09.04.2023 |
| 2 | பளை BOC | 85309819 | 27.12.2019 | 03month | 632,984.15 | 27.03.2023 |
| 3 | பளை BOC | 85309918 | 27.12.2019 | 06 month | 9,700,000.00 | 27.06.2023 |

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர் :- கௌரவ உறுப்பினர் வேலுப்பிள்ளை வசந்தரூபன்

**தீர்மான இலக்கம் :- 06/ 17.03.2023**

எமது சபையின் புலோப்பளை சந்தைக் கோழி இறைச்சி கடை, முள்ளிப்பற்று சந்தைக் கோழி இறைச்சி கடை மற்றும் பழைய முள்ளிப்பற்று உப அலுவலகம், கருவாட்டுக் கடை ஆகியவற்றிற்கு கேள்விகோரல், மீள் கேள்வி கோரல், ஏலக்கேள்வி கோரல் அகியன கோரப்பட்டும் எவரும் பெற்றுக்கொள்ளாத நிலையில் இறுதியாக ஏலக்கேள்வி கோரப்பட்ட தொகையிலிருந்து 10% குறைக்கப்பட்ட

தொகைக்கு ஏலம் விடுவதற்கான அனுமதியினை கிளிநொச்சி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடமிருந்து பெற்று குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதென சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டது.

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்

வழிமொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் கனகராசா அருட்செல்வி

**தீர்மான இலக்கம் :- 07/ 17.03.2023**

புலோப்பளை உப அலுவலகம், முள்ளிப்பற்று உப அலுவலகம் ஆகியவற்றிற்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் வியாபார நிலையங்களை கேள்வி கோரல் மூலம் வழங்குவதற்கும் மாதாந்த வாடகைத்தொகையின் 10 வருடப் பெறுமதித் தொகையினை Key money ஆக பெற்று பச்சிலைப்பள்ளி பிரதேசத்திற்குட்பட்டவர்களுக்கு முன்னுரிமை வழங்கி நீண்டகாலக்குத்தகைக்கு வழங்குவதெனவும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**இயக்கச்சி சந்தைக் கடைகள்**

PS- 09

Vs-04

**புலோப்பளை பஸ்நிலைய கடை**

பேருந்து தரிப்பிட மேல்மாடிக்கடை இல- 05

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்

வழிமொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் தவராசா ரமேஸ்

**தீர்மான இலக்கம் :- 08/ 17.03.2023**

புலோப்பளை உப அலுவலகம், முள்ளிப்பற்று உப அலுவலகம் ஆகியவற்றிற்குட்பட்ட கீழ்க்குறிப்பிடப்படும் வியாபார நிலையங்களுக்கான தன்மை மாற்றம் மற்றும் உரிமை மாற்றம் ஆகியன அவர்களது கோரிக்கைக்கு அமைவாக கீழ்க்குறிப்பிட்டவாறு மாற்றம் செய்யப்பட்டு ஒப்பந்தம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்குவதென சபையினால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**வியாபார தன்மை மாற்றம்**

ஆனந்தன் அகிலேஸ்வரி - புடவையகம் - புகைப்படக்கலையகம்

கி.வரதீஸ்வரன் - பல்பொருள் - உணவகம்

செ.புஸ்பராணி - பல்பொருள் - தொலைபேசி விற்பனை

கரேகோபி - பல்பொருள் - தொலைபேசி விற்பனை

**உரிமை மாற்றம்**

கலிஸ்ரன் ஆன் பற்றீசியா - இ.அரியமணி (தாயார்)

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர்:- கௌரவ உபதவிசாளர் முத்துக்குமார் கஜன்

**கௌரவ உறுப்பினர் தவராசா ரமேஸ் கருத்துத் தெரிவிக்கையில்** இயக்கச்சிப்பகுதியில் நீண்டகாலமாக ஒருவர் துவிச்சக்கர வண்டி திருத்தும் கடை ஒன்றினை ஆறு, ஏழு வருடங்களாக நடாத்தி வருவதாகவும் குறித்த நபரிற்கு கடை ஒன்றினை வழங்கு உதவுமாறும் கோரப்பட்டது.

**தீர்மான இலக்கம் :- 09/ 17.03.2023**

UNDP-CDLG திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட Improve the Accessibility of Disable People வேலை நிறைவடைந்த நிலையில் அதற்கான கொடுப்பனவு சிட்டைக்கான சிபார்சினை பெற்று சபை நிதியில் முற்பணமாக **ரூபா.197,382.64** இனை ஒப்பந்ததாரருக்கு வழங்குவதெனவும், UNDP-CDLG திட்டத்தினூடாக நிதி கிடைக்கப்பெற்ற பின்னர் அதனை சீர்செய்வதெனவும் சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் கணபதிப்பிள்ளை துர்சோதனன்

**தீர்மான இலக்கம் :- 10/ 17.03.2023**

LDSP திட்டத்தில் PT-1 நிதியில் மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட Construction of Shopping Unit(03) at Pallai Market வேலையானது மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அனுதிக்கப்பட்ட நிலையில் LDSP திட்டப் பணிப்பாளரின் அறிவுறுத்தலிற்கமைய குறித்த வேலையானது இடைநிறுத்தப்பட்டு அதே வேலைத்திட்டம் தற்போது PT-2 நிதியில் மேற்கொள்வதற்காக முன்மொழியப்பட்ட நிலையில் PT-1 நிதியில் கீழ் குறித்த வேலையினை மேற்கொள்வதெற்கான

அனுமதியினை சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

- Construction of Shopping Unit(03) at Pallai- 5,022,520.69

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் தியோப்பிள்ளை பிரமிளா

**தீர்மான இலக்கம் :- 11/ 17.03.2023**

எமது சபையின் எல்லைக்குட்பட்ட முகமாலை பகுதியில் 05 மின்குமிழ்கள் பொருத்துவதற்கு ஏதுவாக களஞ்சியத்தில் காணப்படும் பழைய மின் விளக்குகளை திருத்தம் செய்வதற்கான பொருட்களை கொள்வனவு செய்து குறித்த மின்விளக்குகளை பொருத்துவதெனவும், இதனை பொருத்துவதற்காக இலங்கை மின்சார சபையால் வழங்கப்பட்ட பொருத்துதல் செலவு **ரூபா.16,273.23** இனை மின்சார சபைக்கு வழங்குவதெனவும் சபையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

முன்மொழிந்தவர் :- கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்
வழிமொழிந்தவர்:- கௌரவ உறுப்பினர் கணபதிப்பிள்ளை துர்சோதனன்

**தொடர்ந்து கௌரவ உறுப்பினர் வேலுப்பிள்ளை வசந்தரூபன் கருத்துத் தெரிவிக்கையில்** குறுகிய காலத்தில் மீண்டும் விசேட கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாகவும் கௌரவ தவிசாளர், உபதவிசாளர், உறுப்பினர்கள் மற்றும் செயலாளர் அனைவருக்கும் வணக்கம் செலுத்தப்பட்டது, கூட்டத்திற்கு சமூகம் தராத உறுப்பினர்களையும் நினைவுபடுத்தப்பட்டது.

நாளையுடன் சபையினது ஆயுட்காலம் முடிவடைவதாகவும், மீண்டும் எப்போது சந்திப்பபோம் என தெரியவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது. எமது சபையின் செயலாளர் அவர்கள் திணைக்களத்தலைவர் ஒருவர் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருப்பதாகவும் இதற்கு பாராட்டக்களை வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டது. சில சமயங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றும் போது தலையிட்டு தீர்மானங்களில் திருத்தம் மேற்கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

உத்தியோகத்தர்களை அணுகுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாக காணப்பட்டாலும் அவர்களுக்கான சலுகைகளான இடர்கடன், பண்டிகை முற்பணம்

தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றும் போது தானே முதலில் வழிமொழிவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் டயாளினியுடன் வாதப்பிரதி வாதங்கள் இடம்பெற்றதாகவும் ஊடகவியலாளரின் செயற்பாட்டினாலே இவ்வாறான தவறு இடம்பெற்றதாகவும், இதற்காக மன்னிப்பு கோருவதாகவும் மீண்டும் வெளியில் சகோதரத்துடன் நடைபெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் தகவலறியும் சட்டத்தின் பல கேள்விகள் எழுப்பப்படலாமெனவும் இதற்காக பிழை உள்ளதென எண்ணவேண்டாம் எனவும் கூறப்பட்டது.

**தொடர்ந்து கௌரவ உறுப்பினர் வரதராசா டிசாந்தன் கருத்துத் தெரிவிக்கையில்** அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கப்பட்டது. ஐந்து வருடம் ஒரு கூட்டாக இருந்து பிரதேச அபிவிருத்திக்கு செயற்பட்டுள்ளதாகவும் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தும் எண்ணத்துடன் வருகை தந்ததாகவும், தனிப்பட்ட நோக்கத்தில் செயற்படவில்லையெனவும், தனிப்பட்ட நோக்கிற்காக செயற்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்பு கோருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கௌரவ தவிசாளர் தனது திறமையினால் பிரதேசத்திற்கு அபிவிருத்தி தொடர்பான வேலைகளை ஆற்றியதாகவும் செயலாளர் அவர்களால் உரிய காலத்திற்கு கடமைகள் யாவும் இடம் பெற்றதாகவும் இதற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

இலங்கையிலேயே அதிகளவான இளைஞர்களைக் கொண்ட சபையாக இச்சபை விளங்குவதாகவும், இனிவரும் காலத்திலும் செயலாளர் மக்களிற்கு சேவையினை வழங்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

**தொடர்ந்து கௌரவ உறுப்பினர் நாகராசா நகுலேஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்** சபை முடிவடைவது கவலை அளிப்பதாகவும் சபைக்கென நியமிக்கப்பட்ட செயலாளர் பொருத்தமானர் எனவும் சபையினது தீர்மானங்களிற்கு அமைவாக தனது கடமைகளை மேற்கொண்டுள்ளதாகவும், வருமானம் பெறும் சபைகளில் திணைக்களத் தலைவர் கண்டிப்பாக இருக்க வேண்டுமெனவும் அதற்கு அமைவாக தற்போதுள்ள செயலாளர் காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் கலைஞர் கௌரவிப்பு தொடர்பான விடயங்களிற்கு கௌரவ உறுப்பினர் வேலுப்பிள்ளை வசந்தரூபன் அவர்களும் தானும் சபைக்கு அடிக்கடி வருகை தருவோம் எனவும் கூறினார்.

**தொடர்ந்து கௌரவ உறுப்பினர் தவராசா ரமேஸ் கருத்துத் தெரிவிக்கையில்** அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கப்பட்டது. 2018 ம் ஆண்டில் தான் முதலில் உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிட்டதாகவும், ஆரம்பத்தில் கௌரவ தவிசாளர், உபதவிசாளர் அவர்களை ஆரம்பத்தில் சந்தித்தாலும் அவர்கள் கோரியமைக்கு

அமைவாக தேர்தலில் போட்டியிட்டதாவும் அத் தேர்தலில் 28 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றதாகவும் அக்காலப் பகுதியில் வெற்றி, தோல்வி என்பவற்றின் விளைவு அறிந்திருக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

2018 ம் ஆண்டிலிருந்து இன்று வரை உறுப்பினராக இருந்தமையினால் பிரதேச நிகழ்வுகளில் கலந்து கொண்டதாகவும், அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஈடுபட்டிருந்ததாகவும் தெரிவித்தார். சபைக்கு ஆரம்பத்தில் வருகை தருமிடத்து வட்டாரம் இருந்ததை விட தற்போது வளர்ச்சியடைந்துள்ளதாகவும், சபையினுடைய செயலாளர், உத்தியோகத்தருடன் முரண்பட்டிருந்தால் அதற்காக மன்னிப்பு கோருவதாகவும் கூறினார்.

**தொடர்ந்து கௌரவ உறுப்பினர் கணபதிப்பிள்ளை துர்சோதனன் கருத்துத் தெரிவிக்கையில்** அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கப்பட்டது. கல்கலைக்கழகத்தில் கல்வி ரீதியாக கற்ற அரசியல் வேறு, சமூகத்தில் நடைமுறையில் உள்ள அரசியல் வேறு எனவும் இதனை ஐந்து வருட காலத்திற்கு பிற்பாடு தான் இதனை அறிந்துள்ளதாகவும் ஆளுமை மிக்க தலைவரின் கீழ் கடமை புரிந்துள்ளதாகவும் இதற்காக பாராட்டுக்களை தெரிவிப்பதாகவும் கௌரவ உறுப்பினர்கள் சபைக்கு கிடைத்தமை பொக்கிசமெனவும் எதிர் வருகின்ற சபையும் இவ்வாறு அமைய வேண்டுமெனவும் தெரிவிக்க்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபை எடுத்துக்காட்டான செற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாகவும் இதற்கு உதாரணமாக பண்பாட்டு பெருவிழா ஒன்றினை நடாத்தியதாகவும் குறிப்பிட்டார்.

தட்டுவன் கொட்டிப்பிரதேசத்தினால் இலங்கையிலே உயரமான நடராஜர் சிலை ஒன்று கரைச்சி பிரதேச சபையினால் அமைக்கப்பட்டுள்ளதாகவும் இது எமது பிரதேச சபையினுடைய நுழைவாயிலில் அமையப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மகளீர்களுக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டுமெனவும் மகளீர் தினத்தினை அனுஸ்டிக்கப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தல் காலங்களில் மக்களுக்கு பொய்யான வாக்குறுதிகளை வழங்க வேண்டாமெனவும் கடந்த தேர்தலில் துர்அதிஸ்டவசமாக தான் போட்டியிட்டதாகவும் குறிப்பிட்டார்.

வீதி விளக்கு ஒளிராமை, மரம் வெட்டுதல் தொடர்பான மக்களின் முறைபாடு செய்தமைக்கு திருத்தி வழங்கப்பட்டதாகவும் ஆனாலும் சிற்சில விமர்சனங்கள் மனதை நோகடித்ததாகவும் குறிப்பிட்டார்.

முதலாவது வரவு செலவுத்திதட்டத்தினை கட்சிக்காக எதிர்த்ததாகவும் அடுத்தடுத்த காலப்பகுதியில் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவு வழங்கியதாகவும் தெரிவித்தார்.

கடந்த வருடம் அற்புதமான காலத்தினை இழந்ததாகவும் 2021 ம் ஆண்டு காலப்பகுதி பட்டினி பஞ்சம் காணப்பட்டதாகவும் வடக்கு மக்களை இறைவன் கைவிடாது காப்பாற்றியுள்ளதாகவும் தெரிவித்தார்.

**தொடர்ந்து கௌரவ உறுப்பினர் தியோப்பிள்ளை பிரமிளா கருத்துத் தெரிவிக்கையில்** அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கப்பட்டது. வேலைத்திட்டங்களை மேற்கொண்டமைக்கு கௌரவ தவிசாளர் மற்றும் சபையுடன் தொடர்புடைய செயலாளர், உத்தியோகத்தர்களிற்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

**தொடர்ந்து கௌரவ உபதவிசாளர் முத்துக்குமார் கஜன் கருத்துத் தெரிவிக்கையில்** அனைவருக்கும் வணக்கம் தெரிவிக்கப்பட்டது. 2023 க்கான நிதியாண்டு வெலைத்திட்டத்தினை சபை கலைக்கப்பட்டாலும் மேற்கொண்டு வழங்குமாறு கோரப்பட்டது. 2011 இருந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபட்டாலும் 2018 ல் இருந்து அரசியலில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்தார். இரு அரசியல் காணப்படுவதாகவும் இவற்றில் முறைசார அரசியலில் சமூகமளித்துள்ளதாகவும் ஐந்து வருட காலமும் அரை அதிகாரியாக மக்களுக்கு சேவையாற்றியதாகவும் தெரிவித்தார்.

எமது நோக்கம் ஒன்று இனம் ஒன்று இதனால் ஒன்றுபட்டு செயற்பட வேண்டுமெனவும் பண்பாட்டு விழுமியங்களை பேணி ஒன்றாக செயற்பட வேண்டுமெனவும் கூறினார். கௌரவ உறுப்பினர் நாகராசா நகுலேஸ்வரனின் அவரது வாழ்க்கை ஒரு வரலாறெனவும் அவரது நோக்கம் தமிழ் தேசியம் எனது இதனை அவரது அடி மனதில் இனம் காணக்கூடியதாக உள்ளதாகவும் கூறினார்.

எதிர்வருகின்ற தேர்தலில் போட்டியிட்டு புதிய உறுப்பினர்கள் சமூகமளிப்பதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுவதாகவும் கூறினார்.

எமது சபையில் கடமையாற்றும் செயலாளர் அவர்கள் தீர்மானங்களுக்கு அமைவாக செயற்பட்டுள்ளாரெனவும் தமது நோக்கம் மக்களிற்கு சேவை வழங்குவது அதற்கமைவாக சேவையாற்றியதாகவும் கூறினார்.

கௌரவ ஆளுநரின் கீழ் அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளதனால் பொது நினைவுச்சின்னங்கள் நிறுவ முடியாதுள்ளதாகவும் கறிப்பிட்டார்.

தேசவிடுதலைக்கான குரல் கொடுத்தவர்களின் கனவுகள் நனவாக வேண்டுமெனவும் இவ்வெண்ணத்தினை மக்களிடம் விதைக்க வெண்டுமெனவும் ஐந்தாண்டு காலம் இதற்கமைவாக செயற்பட்டதாகவும் இனிவரும் காலங்களில் சபைக்கு வரி செலுத்துனராகவுள்ளதாகவும் தெரிவித்தார்.

**தொடர்ந்து கௌரவ தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் கருத்துத் தெரிவிக்கையில்** நீண்ட உரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளதாகவும் அனைவரது கருத்துக்களையும் வரவேற்றுள்ளதாகவும் தொடர்ச்சியாக பிரதேச சபையுடன் தொடர்புபட்டிருத்தல் வேண்டுமெனவும் 2019 ல் இருந்து தொடர்ச்சியாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பங்களிப்புக்கள் சபைக்கு கிடைக்கப்பபெற்றதாகவும் 50 000.00 ரூபா பெறுமதியான நூல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், கணினி அறை ஒன்று கிடைக்கப்பெற்றதாகவும் குறிப்பிட்டார்.

சபையுடன் அனைவரது இடைத்தொடர்புகள் இருக்க வெண்டுமெனவும் பொது வாழ்வ நன்றாக அமைய வேண்டுமெனவும் செயற்பாட்டு அரசியலில் தொடர்ந்து செயற்படுவதாகவும் கூறினார்.

தொடர்ந்து கௌரவ தவிசாளர் அவர்களினால் 17.03.2023 திகதிய விசேட சபைக்கூட்ட அறிக்கை அங்கீகாரம் கோரப்பட்டது. கௌரவ தவிசாளரினால் முன்மொழியப்பட்டு கௌரவ உறுப்பினா் கனகராசா அருட்செல்வி அவர்களால் வழிமொழியப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இத்துடன் இக்கூட்டமானது ந.ப 12.00 மணியளவில் இனிதே நிறைவுற்றது.

| | |
|---|---|
| ……………………………. | …………………………. |
| செயலாளர், | தவிசாளர், |
| பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, | பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, |
| பளை. | பளை. |